திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது விவசாயிகள் மத்தியிலே மின் துண்டிப்பு என்பது மிக அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதிக முக்கியத்துவம், வாய்ந்த இந்த நிகழ்ச்சி குறித்து இங்கே விவாதிப்பதற்கு முன்னுரிமை தந்து எடுத்துக்கொண்டிருக்கவேண்டும்என்ற கருத்தை வலியுறுத்தி நான் சார்ந்திருக்கின்ற உழைப்பாளர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கின்ற வகையில் நாங்களும் வெளி நடப்பு செய்கிறோம்.

(உழைப்பாளர் முன்னேற்றக் கழகத்தினர் வெளிநடப்பு செய்தனர்).

(5) அறிக்கை அளித்தல்.

வாடகைக்கார், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான கட்டணங்கள் மாற்றியமைக்கப் பெறுவது குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை அளிக்கிறேன்.

சமீபத்தில் மைய அரசு அறிவித்துள்ள வரிவிதிப்பால் பெட்ரோல் விலை உயர்ந்திருப்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் வாடகைக்கார், மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களின் கட்டணங் களைக் கீழ்க்கண்டவாறு உடனடியாக உயர்த்த அனுமதிக்க 1939-ம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டம் விதி 43, துணை விதி 1-ன் கீழ் மாநிலப் போக்குவரத்து ஆணையருக்கு ( State Transport Authority ) ஆணையிட அரசு முடிவு செய்துள்ளது.

டாக்சியின் குறைந்த பட்ச கட்டணத்தை தற்போதுள்ள ரூபாய் 1·70-ல் இருந்து ரூ. 1·90 ஆக உயர்த்தவும், ஒரு கிலோ மீட்டருக்கு தற்போதுள்ள 90 பைசாவை 1 ரூபாயாக உயர்த்தவும், ஆட்டோ ரிக்ஷாவின் குறைந்தபட்ச கட்டணத்தை தற்போதுள்ள 80 பைசாவில் இருந்து 1 ரூபாயாக உயர்த்தவும், ஒரு கிலோ மீட்டருக்கு தற்போதுள்ள 40 பைசாவிலிருந்து 50 பைசாவாக உயர்த்தவும், 22 குதிரை சக்திக்குக் குறைவான சுற்றுலா டாக்ஸி வாகனங்களைப் பொறுத்தவரைக்கும் சமவெளிப் பகுதியில் தற்போதுள்ள 90 பைசாவை ஒரு ரூபாயாக உயர்த் தவும், மலைப் பகுதியில் தற்போதுள்ள ஒரு ரூபாயை ரூ. 1·20 ஆக உயர்த்தவும், 22 குதிரை சக்திக்கு மேற்பட்ட சுற்றுலா டாக்ஸி வாகனங்களுக்கு சமவெளிப் பகுதியில் தற்போதுள்ள

1979 மார்ச் 12] [திரு. சி. பொன்னையன்]

ஒரு ரூபாயை ரூ. 1·20 ஆக உயர்த்தவும், மலைப்பகுதியில் தற்போதுள்ள ரூ. 1·20 ஐ ரூ. 1·40 ஆக உயர்த்தவும், குளிர் சாதன அமைப்புள்ள டாக்ஸிகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 20பைசா கட்டண உயர்வு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இவ்வாணை அரசிதழில் வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் பொதுமக்களும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் மோட்டார் வாகன விதி முறைகளின்படி அரசு உள்துறை செயலருக்கு தங்கள் ஆட்சேபணை மனுக்களையும், கருத்துக்களையும் தெரிவிக்கலாம். அவ்வாறு வரப்பெற்ற ஆட்சேபணை மனுக்களையும் கருத்துக்களையும் பரிசிலித்து உள்துறை செயலர் நேர்முக விசாரணை செய்ததின் அடிப்படையில், தற்போது உடனடியாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ள புதிய கட்டண விகிதங்கள் மோட்டார் வாகனச் சட்டம் விதி 43 (1) (c) (i)-ன் கீழ் உறுதிப் படுத்தப்படுவது பற்றி ஆணை பிறப்பிக்கப்படும்.

## (6) கவன ஈர்ப்புகள்.

### (அ) திருச்சிராப்பள்ளி மத்திய சிறை ஆவணங்கள் குறித்து

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, "திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த, 1920 மற்றும் 1930 ஆம் ஆண்டைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்கள் அழிந்துவிட்டதன் காரணமாக, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவதற்கான சான்றிதழைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள இடப்பாடு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

[நண்பகல் 12.00]

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker, Sir, the Freedom Fighters including the ex-I.N.A., Personnel and their dependents viz., the widow, the minor son who has not attained the age of 18 years, and the unmarried minor daughter who has not attained the age of 21 years are being granted Freedom Fighters pension by the Government. For this purppose, the Freedom Fighters should produce extracts from the "Convicts, Register" in support of their claim for having suffered imprisonment for not less than three months in connection with the freedom movement, the last compaign of which was launched between 1942—44. In case, the Freedom Fighter is not able to produce jail extracts, the concerned Jail Superintendents are addressed to furnish relevant extracts relating to the Freedom Fighter.